# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1825 - 2013 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2013.08.23

*1825 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1145 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1142 | ஏல விற்பனைகள் | 1150 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1144 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## *நீதிமன்ற சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை*

*மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் 15.09.2013 ஆந் திகதியன்று மு.ப. 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.*

*2. பொதுமக்கள் எவரும் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.*

*3. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.*

*4. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்துதல் வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*5. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.*

*என். எம். எம். அப்துல்லா,*
*நீதிவான்,*
*நீதிவான் நீதிமன்றம்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*மட்டக்களப்பு,*
*23.07.2013.*

| *தொடர் இல.* | *வழக்கு இல.* | *சான்றுப் பொருள்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01. | AR/829/09 | 1. 08AB5971 ஆம் இலக்க கறுப்பு நிற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| 02. | AR/585/11 | 2. 69281732 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. 69585053 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. 69576493 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 5. 55732797 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 6. 55602825 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 7. 69611239 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 8. 69350637 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 9. LU 35114 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 10. P. 0181547 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 11. இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 |
| 03. | AR/142/12 | கறுப்பு நிற லுமாலா துவிச்சக்கர வண்டி | |
| 04. | AR/400/11 | 69588669 ஆம் இலக்க கறுப்பு நிற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| 05. | AR/401/11 | கறுப்பு நீல லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| 06. | AR/203/11 | 68/2415 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 07. | AR/304/11 | A19735 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 08. | AR/207/11 | 1. இலக்கம் தெளிவற்ற 9340837 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. 1215435 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. 69456769 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. 69287796 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 5. இலக்கம் தெளிவற்ற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 6. இலக்கம் தெளிவற்ற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 7. இலக்கம் தெளிவற்ற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 8. இலக்கம் தெளிவற்ற ஏசியா ஹலிஸ் துவிச்சக்கர வண்டி | 01 |
| 09. | AR/552/11 | 1. துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. இரும்பு அலுமாரி | 01 |
| | | 3. துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. முச்சக்கர வண்டி | 01 |
| 10. | AR/449/13 | 61 J 3166 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 11. | AR/477/13 | இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 |
| 12. | AR/309/13 | 69781071 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 13. | AR/115/12 | 69331755 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 14. | AR/114/12 | 6961706 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 15. | AR/385/12 | 69259931 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 16. | AR/386/12 | 7028417 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 17. | AR/468/12 | இலக்கம் தெளிவற்ற கறுப்பு நிற துவிச்சக்கர வண்டி | 01 |
| 18. | AR/201/11 | 69521883 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 19. | AR/202/11 | 69336384 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 20. | AR/450/08 | 55902083 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 21. | AR/693/11 | 1. நொக்கியா 110 இன கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 2. ED 84413 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 22. | AR/22/12 | 1. இரும்புப் பிடி கொண்ட வெள்ளை நிற கத்தி | 01 |
| | | 2. தண்ணீர் இறைக்கும் மோட்டார் | 01 |
| | | 3. 69338848 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 23. | HCB/2445/06 B/786/01 | AP 20245 ஆம் இலக்க கம்பர் இன துவிச்சக்கர வண்டி | 01 |
| 24. | HCB/2570/08 B/95/07 | இலக்கம் தெளிவற்ற லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| 25. | HCB/2669/08 | 1. 69278065 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | B/95/07 | 2. தங்க நிறத்திலான சிறிய மோதிரம் அடங்கிய சீல் வைக்கப்பட்ட போத்தல் | 01 |
| 26. | HCB/2803/11 B/24/10 | முன் சில்லு இல்லாத சேத மடைந்த நிலையில் துவிச் சக்கர வண்டி | 01 |
| 27. | 99778/E/10 | 004 ஏபி8எம்8 ஆம் இலக்கம் கொண்ட லுமாலா துவிச்சக்கர வண்டி | 01 |
| 28. | 1228/E/11 | நீல நிற துவிச்சக்கர வண்டி | 01 |
| 29. | AR/147/11 | 1. 69571659 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 2. 69267988 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 3. 69556136 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 4. LU 020 ஆம் இலக்க ஹீரோ வர்க்க துவிச்சக்கர வண்டி | 01 |
| | | 5. 55724257 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 30. | AR/390/11 | 1. துவிச்சக்கர வண்டி | 01 |
| 31. | AR/391/11 | 1. துவிச்சக்கர வண்டி | 01 |
| 32. | AR/1304/12 | 1. 69536262 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 33. | AR/99/12 | 1. 64327614 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 34. | AR/1149/13 | 1. இலக்கம் தெளிவற்ற துவிச்சக்கர வண்டி | 01 |
| 35. | AR/151/12 | 1. 55795792 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 36. | AR/143/12 | 1. 57211526 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 37. | AR/127/12 | 1. 69281463 ஆம் இலக்க துவிச்சக்கர வண்டி | 01 |
| 38. | AR/241/12 | 1. துவிச்சக்கர வண்டி | 01 |
| 39. | AR/1059/11 | எக்ரோ வர்க்க தண்ணீர் இறைக்கும் இயந்திரம் | 01 |
| 40. | AR/1061/11 | தண்ணீர் இறைக்கும் இயந்திரம் | 01 |
| 41. | AR/1062/11 | டைகர் வர்க்கம் கொண்ட நீல நிற மின்பிறப்பாக்கி | 01 |
| 42. | AR/314/12 | 1. மடி கணனி (லப்டொப்) | 02 |
| 43. | AR/1314/12 | 1. 15' நீளமான வாவித் தோணிகள் | 02 |
| 44. | AR/99/12 | 1. டோஸ்டர் | 01 |
| 45. | AR/751/12 | 150901259182841, 15091269182917, 150901269182836, 150901269182894 ஆம் இலக்கங்களைக் கொண்ட BP இன ரோணர்கள் | 04 |
| | | 2. FP 55-006, FP 55-251, FP 55-275 இலக்கம் தெளிவற்ற 12ஏ வெற்றி | 04 |
| | | 3. 09A 0895, 09 A 0725, 09 A 07205, 09 A 08305 ஆம் இலக்க மின்சாரத்தட்டு | 04 |
| 46. | AR/401/13 | 1. வாவித் தோணிகள் | 03 |
| 47. | 5254/Misc/12 | சவள் | 01 |
| 48. | 5255/Misc/12 | சவள் | 02 |
| 49. | 5227/Misc/12 | சவள் | 01 |
| 50. | 909/Misc/11 | கோடரி | 01 |
| 51. | 87315/PC/09 | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 52. | 909/F/11 | கோடரி | 01 |
| 53. | 1783/PC/11 | அருவாக்கத்தி | 01 |
| 54. | 2285/Misc/11 | 1. கத்தி | 01 |
| | | 2. அலுமினியத் தராசு | 01 |
| | | 3. 1 கிலோ கிராம் படிக்கல் | 01 |
| 55. | 1478/PC/11 | கோடரி | 01 |
| 56. | 1700/PC/11 | கத்தி | 01 |
| 57. | 1942/PC/11 | கத்தி | 01 |
| 58. | 1579/PC/11 | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 59. | 1369/PC/11 | அருவாக்கத்தி | 01 |
| 60. | 538/Misc/11 | 1. சவள் | 01 |
| | | 2. மண்வெட்டி | 01 |
| 61. | 98684/Misc/10 | 1. சவள் | 02 |
| 62. | 98685/Misc/10 | 1. சவள் | 01 |
| 63. | 2708/Misc/11 | சவள் | 01 |
| 64. | 1237/Misc/11 | சவள் | 02 |
| 65. | 944/Misc/11 | சவள் | 04 |
| 66. | 943/Misc/11 | சவள் | 03 |

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 67. | 98678/Misc/10 | சவள் | 02 |
| 68. | 98679/Misc/10 | சவள் | 01 |
| 69. | 2293/PC/11 | 1. கத்தி | 01 |
| 70. | 3540/Misc/12 | 1. சவள் | 01 |
| 71. | 3539/Misc/12 | 1. சவள் | 02 |
| 72. | HCB/1734/09 (35589/NS/09) | 1. மண்வெட்டி | 01 |
| 73. | HCB/2435/06 | 1. அலவாங்கு | 01 |
| | | 2. சம்சுங் கையடக்கத் தொலைபேசி | 01 |
| | | 3. கைக்கடிகாரம் (பட்டி இல்லை) | 01 |
| 74. | AR/496/11 | 1. மண்வெட்டி | 01 |

8-651

# ஆய விற்பனையும் குத்தகையும்

### மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, கோட்டமுனை கள்ளுத்தவறணைக்கான மீள் குத்தகை விற்பனை

(2013, ஒற்றோபர் - 2014, செத்தெம்பர்)

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் 207 ஆம் இலக்கமுடைய 1982.08.20 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் வெளிவந்த 1982 ஆம் வருட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டமுனை கள்ளுத்தவறணைக்கான 2013, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் 2014, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச்சபை கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 1,500) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2013.08.29 ஆந் திகதி முதல் 2013.09.08 ஆந் திகதி பி.ப. 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும் பெறுமதி சான்றிதழானது, கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ், கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

3. கேள்விப்பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவுசெய்யப்பட்ட தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கங்கொண்ட 2012/01/05 ஆந் திகதிய சுற்று நிருபத்திற்கு அமைவாக காணப்படுதல் வேண்டும்)

7. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. கிரிதரன்,
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு,
2013.08.02.

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதி திகதியும்/ திறக்கும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | ரீரீ இல. 2 | 09.09.2013 | பி.ப. 3.00 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச் சபை 2013.09.09 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாதுவிட்டால் மறுவிற்பனை 2013.09.16 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

8-743

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் கீழ் பின் வரும் கம்பனியின் தகுதிநிலை மாற்றம் பற்றி அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : போர்சூன் பீல்ட்ஸ் லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீபி 5041
பதிவு முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
தகுதிநிலை மாற்றத்தின் பின் கம்பனியின் பெயர் : போர்சூன் பீல்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

செல்வி கிரிஷாந்தி இம்மானுவெல்,
கம்பனி செயலாளர்.

2013, யூலை 29.

8-694

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு, மத்திய வீதி, இல. 105, பரமானந்தம் சுரேஷ் ஆனந் என்பவருக்கு மட்டக்களப்பு, நொச்சிமுனையைச் சேர்ந்த கிட்ணன் ஜெகதீசன், திருமதி லோஜிகானந்தி ஜெகதீசன் ஆகிய எங்களால் வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு வை. க. விநாயகமூர்த்தி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப் பட்டதுமான 28756 ஆம் இலக்க 16.08.2010 ஆந் திகதியும் கொண்டதும் மட்டக்களப்பு உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 51 ஆம் பக்கத்தில் 18 ஆம் புத்தகத்தில் 12.10.2010 பதிவுத் திகதியும் கொண்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றோம் என்பதனை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றோம். இனி இவரால் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் நாங்கள் பொறுப்பல்ல.

கிட்ணன் ஜெகதீசன்,
(திருமதி) லோஜிகானந்தி ஜெகதீசன்.

8-696

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் மிரங்கா ப்ளோரா (பிறைவேட்) லிமிட்டெட் அதன் பெயரை ப்ளோரா டிரக்ட் (பிறைவேட்) லிமிட்டெட் என 2013, யூலை 12 ஆந் திகதியிலிருந்து மாற்றியுள்ளது என அறிவித்தல் வழங்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ப்ளோரா டிரக்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியி இலக்கம் : பீவீ 85994
பதிவு முகவரி : இல. 10, களுகலே, நுவரெலியா

8-682

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிறீன் எக்குவர்டர் கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 93508
மாற்றம் ஏற்பட்ட திகதி : 2013, யூலை 11
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இலக்கம் 6-03, பார்க் டவர், ஹெவ்லொக் சிட்டி, கொழும்பு 06

இயக்குனர்கள்.

8-693

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பலாந்தொட்ட உட-பெறகம வைத்தியசாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒலோக்குவபட்ட பெந்திகே காமினி ஆகிய நான், அம்பலாந்தோட்டை உட-பெறகம வைத்தியசாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த உப்புல்

விக்கிரமரத்ன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட பத்தரமுல்ல பதிவாளர் நாயக திணைக்களத்தின் அற்றோணித் தத்துவப்புத்தகத்தில் 376 ஆம் தொகுதியில் 145 ஆம் பிரிவில் நாட்புத்தகம் 1911 ஆம் இலக்கத்தின்கீழ் 2008.02.25 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2013.07.26 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்துள்ளேன் என அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஒலோக்குவபட்ட பெந்திகே காமினி.

8-690

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 19.07.2013 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சீஏஎஸ் டெக்ஸ் கன்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 93677
*கம்பனியின் முகவரி* : இல. 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 07

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-687

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கீ செவன் கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 93683
*கம்பனியின் முகவரி* : 5 ஆவது மாடி, 'ஜபிளம் பில்டிங்', நவம் மாவத்தை, கொழும்பு 02
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 24.07.2013

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-686

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எஸ்.பி. வெர்லட்ஸ்நெட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 06.12.2007
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 62303
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 371, காலி வீதி, கல்கிஸ்ஸை

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 04.

8-724

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தல் மூலம், மேற்படி சட்டத்தின் பிரிவு 8 இற்கு அமைவாக பேலியகொடை, நீர்கொழும்பு வீதி, 111 ஆம் இலக்கத்தை பதிவு அலுவலகமாகக் கொண்டுள்ள போர்ப்ஸ் அன்ட் வோர்க்கர் லெசர் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் பீவீ 7371) நிறுவனம் தமது பெயரை ரெஸ்ப்லன்டன்ட சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட் என மாற்றியுள்ளதை அறியத்தருகின்றது :-

சபையின் உத்தரவின் பிரகாரம்,

கம்பனி செயலாளர்,
இலக்கம் SEC/594/91.

8-723

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2010, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி கீழ்க்குறிப்பிட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : லங்கா ஸ்போர்ட்டிங் குட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73979
*கூட்டிணைப்பின்போது பதிவு அலுவலகம்* : இல. 365, டாம் வீதி, கொழும்பு 12

*தற்போதைய பதிவு அலுவலகம் : ப்ளொக் ஏ, லொட் 26, மல்வான, பியகம*

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்.

லெவல் 04,
இல. 02, காசல் ஒழுங்கை,
கொழும்பு 04.

8-741

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கூட்டிணைத்தல் அறிவித்தலை இத்தால் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : மெட் களரி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 93748
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 30/905, லண்டன் பெலஸ், கொழும்பு 07
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2013, யூலை 25

சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுஷன்ஸ் அன்ட்
செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

8-730

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சிலோன் நைலோன் கோர்ப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92348
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, மே 20
*பதிவு முகவரி* : தொகுதி இல. 14, ஹொரண எக்ஸ்போர்ட் புரோசெஸிங் சோன், பொறலு கொட, போறுபாதண்ட

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

சிலோன் நைலோன் கோர்ப்பரேஷன்
(பிறைவேட்) லிமிட்டெட்.

8-727

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : என்சீபீசீ டுவெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92672
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, யூன் 12
*பதிவு முகவரி* : இல. 2, பெல்ரோனா ஒழுங்கை, கொழும்பு 04

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

என்சீபீசீ டுவெல் லங்கா
(பிறைவேட்) லிமிட்டெட்.

8-728

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 241(4) (ஆ) எனும் பிரிவின் நியதிகளின்படி நொரடெல் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டையும் நொரடெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டையும் ஒன்றிணத்தல்

நொரடெல் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டினதும் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 3738) (''நொரடெல் இன்டர்நஷனல்'') மற்றும் நொரடெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டினதும் (கம்பனி பதிவலக்கம் 4674) (''நொரடெல் லங்கா'') பணிப்பாளர்கள் சபை, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்றிணைப்பொன்று செய்யப்படுமெனத் தீர்மானித் துள்ளது. இதன் மூலம் நொரடெல் இன்டர்நஷனலும் நொரடெல் லங்காவும் தனி உருவகமொன்றாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைக்கப்பட்ட உருவகம் நொரடெல் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டாக இருத்தல் வேண்டும்.

ஒன்றிணைவு முன்மொழிவின் பிரதிகள், ஒன்றிணையும் கம்பனி யொன்றின் எவரேனும் பங்குதாரரினால் அல்லது கடன்கொடுநரினால் அல்லது ஒன்றிணையும் கம்பனியொன்று எந்த ஆளுக்குக் கடப்பாடு உடையதோ அந்த எவரேனும் ஆளினால், கட்டுநாயக்க. KEPZ, கட்டம் II, த. பெ. இல. 15 என்ற முகவரியில் ஒன்றிணையும் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகங்களில் வழமையான தொழில் மணித்தியா லங்களின்போது பார்வையிடப்படுவதற்குக் கிடைக்கும். அத்துடன் ஒன்றிணையும் கம்பனியொன்றின் பங்குதாரர் அல்லது கடன் கொடுநர் ஒருவர் ஒன்றிணையும் கம்பனியொன்று எந்த ஆளுக்குக் கடப்பாடு உடையதோ அந்த எவரேனும் ஆள், ஒன்றிணையும் கம்பனியொன் றுக்குக் விடுக்கப்படும் வேண்டுகோளின் மீது ஒன்றிணைவு முன்மொழிவின் பிரதியொன்று கட்டணமின்றி வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

ஒன்றிணைவானது 2013, ஒற்றோபர் 1 ஆந் திகதியன்று பயனுறுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

முகாமைப் பணிப்பாளர்,
நொரடெல் இன்டர்நஷனல்
(பிறைவேட்) லிமிட்டெட்.

2013, ஓகத்து 16.

8-726/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 241(4) (ஆ) எனும் ஆம் பிரிவின் நியதிகளின்படி நொரடெல் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டையும் நொரடெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டையும் ஒன்றிணைத்தல்

நொரடெல் இன்டநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டினதும் (கம்பனிப் பதிவிலக்கம் பீவீ 3738) (''நொரடெல் இன்டர்நஷனல்'') மற்றும் நொரடெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டினதும் (கம்பனி பதிவலக்கம் 4674) (''நொரடெல் லங்கா'') பணிப்பாளர்கள் சபை, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 239 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்றிணைப்பொன்று செய்யப்படுமெனத் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் நொரடெல் இன்டர்நஷனலும் நொரடெல் லங்காவும் தனி உருவகமொன்றாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைக்கப்பட்ட உருவகம் நொரடெல் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்டாக இருத்தல் வேண்டும்.

ஒன்றிணைவு முன்மொழிவின் பிரதிகள், ஒன்றிணையும் கம்பனியொன்றின் எவரேனும் பங்குதாரரினால் அல்லது கடன்கொடுநரினால் அல்லது ஒன்றிணையும் கம்பனியொன்று எந்த ஆளுக்குக் கடப்பாடு உடையதோ அந்த எவரேனும் ஆளினால், கட்டுநாயக்க. KEPZ, கட்டம் II, த. பெ. இல. 15 என்ற முகவரியில் ஒன்றிணையும் கம்பனிகளின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகங்களில் வழமையான தொழில் மணித்தியாலங்களின்போது பார்வையிடப்படுவதற்குக் கிடைக்கும். அத்துடன் ஒன்றிணையும் கம்பனியொன்றின் பங்குதாரர் அல்லது கடன் கொடுநர் ஒருவர் ஒன்றிணையும் கம்பனியொன்று எந்த ஆளுக்குக் கடப்பாடு உடையதோ அந்த எவரேனும் ஆள், ஒன்றிணையும் கம்பனியொன்றுக்குக் விடுக்கப்படும் வேண்டுகோளின் மீது ஒன்றிணைவு முன்மொழிவின் பிரதியொன்று கட்டணமின்றி வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

ஒன்றிணைவானது 2013, ஒற்றோபர் 1 ஆந் திகதியன்று பயனுறுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

முகாமைப் பணிப்பாளர்,
நொரடெல் லங்கா
(பிறைவேட்) லிமிட்டெட்.

2013, ஓகத்து 16.

8-726/2

## பொது அறிவித்தல்

நுகோடை, இல. 5/1, ரெயில்வே அவெனியூவில் உள்ள எஸ் அன்ட் டி அசோசியேட்ஸ் நிறுவனத்தின் பங்குடைமை 28.05.2013 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும் வண்ணம் கலைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

எஸ் அன்ட் டி அசோசியேட்ஸ்,
பங்குதாரர்கள்.

8-774

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மரினா ஓஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 93309
கூட்டிணைப்புத் திகதி : 28.06.2013
பதிவு முகவரி : இல. 183, குணசிரி மாஹிமி மாவத்தை, மிரிஸ்ஸ

ஐ. எஸ். என். கொத்தாகொட,
கம்பனி செயலாளர்.

8-791/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கேடி ஓஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 93397
கூட்டிணைப்புத் திகதி : 04.07.2013
பதிவு முகவரி : இல. 183, குணசிரி மாஹிமி மாவத்தை, மிரிஸ்ஸ

ஐ. எஸ். என். கொத்தாகொட,
கம்பனி செயலாளர்.

8-791/2

## பொது அறிவித்தல்

### ட்ரைலொஜி டிவலொப்பர்ஸ் (பீவீரீ) எல்ரீட

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பாக பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-*

(1) *கம்பனியின் பெயர்* : ட்ரைலொஜி டிவலொப்பர்ஸ் (பீவீரீ)

(2) *கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 31.07.2013

(3) *பதிவிலக்கம்* : பீவீ 93831

(4) *பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 5-8/2, மிலாகிரிய அவெனியூ, கொழும்பு 04

திருமதி ச. வாசவன்,
கம்பனி செயலாளர்.

8-757/1

---

## பொது அறிவித்தல்

### சிரஸ் ஹொலிடேஸ் (பீவீரீ) எல்ரீட

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பாக பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-*

(1) *கம்பனியின் பெயர்* : சிரஸ் ஹொலிடேஸ் (பீவீரீ) எல்ரீட

(2) *கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 04.07.2013

(3) *பதிவிலக்கம்* : பீவீ 93392

(4) *பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 14ட, மீடியல் பாதை, இரத்மலானை

திருமதி ச. வாசவன்,
கம்பனி செயலாளர்.

8-757/2

---

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சார்ட் எச் ஆர் சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பீவீ 93544

*கூட்டிணைப்புத் திகதி* : 2013, யூலை 12

*பதிவு முகவரி* : இல. 141/3, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

8-764

---

## இலங்கையின் கிளை அலுவலகம் பதிவு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பவர் இக்விப்மன்ட் சவுத் ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : எப்சீ 1221

*திகதி* : 12.07.2013

*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 456/1, "குமுது", மத்தேகொட வீதி, கித்துல்ஹேன, மத்தேகொட

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02,
17.07.2013.

8-765

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எப்பலோ டிவலொப்பர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : பீவீ 93564

*திகதி* : 15.07.2013

*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 175/14ஏ, 1/1, நாவல வீதி, கொழும்பு 05

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02,
17.07.2013.

8-766

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

புலோலி மேற்கு, புலோலி, இலங்கைச் சனநாயக குடியரசில் வசித்து தற்காலம் 21. எப்பொட்ஸ் ட்ரைவ், வெம்ளி, மிட்ல்செக்ஸ், எச்ஏ03எஸ்பி, ஐக்கிய இராச்சியத்தில் வதியும் சின்னத்தம்பி சிவப்பிரகாசம் கைம்பெண் பொன்னமாவாகிய நான் இத்தால் அறியத்தருவதாவது-

1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி நொத்தாரிசு வ. கு. கணபதிப்பிள்ளையால் 3765 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் தம்பசிட்டி வீதி காணிப்பதிவ கத்துக்கு எதிர் பருத்தித்துறை தங்கராசா ஆனந்த ஆழ்வாரை எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்து அதிகாரமளித்து வழங்கிய அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் கைவாங்கி அழித்து பலமற்றதாக்கிவிடுகின்றேன்.

இத்தால் இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் மேலும் அறிவிப்பதாவது, என்னால் கைவாங்கி அழித்து பலமற்றதாக்கிய அற்றோணித் தத்துவப்பத்திரத்தை கொண்டிருந்த தத்துவகாரர் என் பெயரிலும் என் சார்பிலும் எனக்காகவும் மேற்கொள்ளும் எச்செயலுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அல்லது நடவடிக்கைகளுக்கும் நான் இவ்வறிவித்தல் வழங்கிய நேரத்தில் இருந்து பொறுப்பாளி அல்ல என அறியத்தருகின்றேன்.

சின்னத்தம்பி சிவப்பிரகாசம் கைம்பெண் பொன்னம்மா.

8-763

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1108 5342 9423 - டபிள்யூ. எஸ். எல். லொவெ மற்றும் எம். ஏ. ஏ. டபிள்யூ. முத்துக்குட

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினால் 2011.07.06 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 16.09.2011 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 11.08.2011 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட ஐம்பது இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருபத்தைந்து ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 50,36,025.43) 2011, சனவரி 12 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை நாற்பத்தேழு இலட்சத்து பதிமூவாயிரத்து அறுபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் (ரூ. 47,13,062.50) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்திரண்டு வீதம் (22%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 09.09.2013 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப் பிரிவிற்குள் தெற்கு பிட்டிகல் கோரலேயின் யட்டகலன் பத்துவின் மட்டகொட்டுவை கிராமத்தில் அமைந்த "தங்காவத்த எனும் மாதங்காஹாவத்த எனும் கஜுகாஹாவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எப். எச். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999.05.10 ஆந் திகதியிடப்பட்ட இல. 3234 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லென் குணவர்தனவிற்குச் சொந்தமான காணி மற்றும் பிரதான வீதிக்கான வீதி ; கிழக்கிற்கு : தோட்டங்களில் இருந்து பிரதான வீதிக்கான வண்டிப் பாதை மற்றும் 1989.08.30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 943 இன் லொட் 2 ; தெற்கிற்கு : லொட் 2 ; மற்றும் மேற்கிற்கு : அன்னன்காலிய வயல் வெளி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1று. 0பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் இல. 3234 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாரவில காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் கே 84/228 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

8-761

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின்கீழும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்து, நிலமனை ஏல விற்பனை**

கடன் தொடர்பு இல. 343/2011

உகுவெல கலல்பிட்டிய றோட், "ஆலோகா" வில் வசிக்கும் திரு. ரணவீர சன்ஜீவ கொடிதுவக்கு மற்றும் திருமதி இலேகுட்டிகே டொன் பெலானி இரேஷா தி சில்வா ஆகியோர் ஈடுவைத்த ஆதனம்

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.07.26 ஆந் திகதிய 1821 ஆம் இலக்க

வர்த்தமானியிலும் 2013.07.12 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, டொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த சொக்மன் அன்ட் சமரவிக்ரம ஏலத்தின் ஏலதாரர் 2013.09.20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு பல்லேசிய பற்றுவில் பாதெனியவில் அமைந்த கட்டுபத்யாய என யாவரும் அறிந்த மற்றும் அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பீ. விமலசேன தயாரித்த 1995.02.04 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1305 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த பாகம் வரைபடம் இல. 1305 இன் படி எல்லைகளாவன - வடக்கில் : வரைபடம் இல. 1305 இல் துண்டு 4 என விபரித்த அதே காணியின் மீதிப்பாகமும் ; கிழக்கில் : தம்புள்ளையிலிருந்து ஹபரண வரை பிரதான றோட்டும் ; தெற்கிலும் மேற்கிலும் : வின்சென்ட் பெரேரா உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள வீடு, பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் D 407/226 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு அண்மையில் அறவிடப் பட்டுள்ளது :-

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு பல்லேசிய பற்றுவில் பாதெனியவில் அமைந்த கட்டுபத்யாய என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. பீ. விமலசேன தயாரித்த 1995.10.05 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1337 இல் துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த பாகம் வரைபடம் இல. 1337 இன் படி மேற்குறிப் பிட்ட துண்டு 5 இன் எல்லைகளாவன - வடக்கில் : வரைபடம் இல. 1337 இல் துண்டு 4 என விபரித்த தும்பலபிட்டியவும்; கிழக்கில் : ஹபரணயிலிருந்து தம்புள்ளை வரை பெருந்தெருவும்; தெற்கில் : தம்மென்னா எலயும் ; மேற்கில் : வின்சன்ட் பெரேரா உரிமை கோரும் காணியும் எல்லைகளாக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். என். பீ. குணசேகர,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்றரக் கிளை,
மாத்தளை.

8-659

---

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***836 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே, அதிகாரி பற்று, களனி பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட ஹுணுப்பிட்டி கிராமத்தில் இல. 7/25, சீவலி வீதி என்னும் முகவரியில் அமைந் துள்ள நித்துல்கஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் டீ. சீ. எம். எஸ். விமலரத்ன அவர்களால் வரையப்பட்ட, 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 81ஏ/2005 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு எக்ஸ் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலான காணித்துண்டு-**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 10பே.)**

*(திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திலகரத்னம் துஷ்யந்தன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 836 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் வத்தளை மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த லோரன்ஸு ஹேவகே சரத் அவர்களால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 71,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள்

அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகால சேவை அனுபவம்.

*தலைமை அலுவலகம் :*

24, டொரிங்டன் வீதி,
கண்டி.
தொலைபேசி : 081-2227593

தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371
மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk

*நகர அலுவலகமும் காட்சியறையும் :*

290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 5.
தொலைபேசி : 011-2502680
011-2585408

தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176
மின்-அஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

8-729